**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெட்டிக்கடை வைக்க நபர் ஒன்றுக்கு ரூ.5,000/– அரசு மான்யமாக வழங்குதல் – 2011–2012–ம் ஆண்டுக்கான திட்டத் தொடராணை– ரூ.3.95 இலட்சம் செலவினம் ஒப்பளிப்பு–ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.2)த் துறை

அரசாணை(நிலை) எண். 65 நாள்:18.11.2011

கார்த்திகை 2 திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண். 75, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 21.5.1999.
2. அரசாணை (நிலை) எண். 31, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–06–2010.
3. அரசாணை(நிலை) எண்.33, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 01–07–2010.

மீண்டும் படிக்கப்பட்டது:-

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண். 4115/மா.தி.ந.3–1/2011 நாள் 04–05–2011, 23–08–2011.

——————

**ஆணை**:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், பெட்டிக்கடை வைக்க ஆகும் மொத்த செலவினத்தில் மூன்றில் ஒரு பங்கு ரூ.5,000/–க்கு மேற்படாமல் வழங்கவும், இத்திட்டத்தின் கீழ் 50 நபர்கள் பயனடையத்தக்க வகையில் ரூ.2.50 இலட்சம் செலவினத்திற்கு ஒப்புதல் அளித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்ட் வருமான உச்சவரம்பை 2010–2011–ம் நிதியாண்டிற்கு முற்றிலும் நிக்கிடவும் மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டங்களுக்காக ரூ.60.00 இலட்சம் கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011–ம் ஆண்டு இத்திட்டத்தினை தொடரவும், 50 மாற்றுத் திறனாளிகள் பயனடையத்தக்க வகையில் ரூ.2.50 இலட்சம் ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் 2011–2012–ம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை தொடரவும் 79 பயனாளிகள் பயனடையத்தக்க வகையில் ரூ. 4.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், 2010–2011ஆம் நிதியாண்டில் 55 நபர்கள் பயனடைந்த வகையில் ரூ.2,75,000/–க்கான பயனீட்டு சான்றிதழினை மேற்கண்ட கடிதத்தில் இணைத்துள்ளார்.

**2.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த பின்னர், மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பெட்டிக்கடை வைக்க மானியம் வழங்கும் திட்டத்தினை **2011–2012**–ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தவும், **79** மாற்றுத் திறனாளிகள் பயனடையத்தக்க வகையில் ரூ.**3.95** இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளவும் இத்தொகையை மாற்றுத் திறனாளிகளுக்கு பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

**3.** மேலே பத்தி **2**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

> "**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**–சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநிலத் திட்டம்–JV– மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலைவாய்ப்பு–**70**–வேலை வாய்ப்பின்மை நிவாரணம். "
>
> (து.தொ.கு. **2235–02–101–JV–7009**)

**4.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.**53489**/நிதி(சந)**2011**.ன்படி நாள் **09.11.2011** அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**78.**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத்
திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத்
திறனாளிகளுக்கான மாநில
ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–**5/35.**
தலைமைக் கணக்காயர், சென்னை–**18/35**
தலைமக் கணக்காயர், சென்னை– **18/35** (பெயரில்)

<u>**நகல்:-**</u>
நிதி (சந) துறை, சென்னை–**9.**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–**9.**
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின்
தனிச் செயலாளர், சென்னை–**9.**
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்